# श्री रामाश्टकम्

# ஶ்ரீ ராமாஷ்டகம்

# Sri Ramar Ashtakam

தமிழ் கவிதை வடிவில்...

பி. ஶ்ரீதேவிபிரசாத்
psdprasad.music@gmail.com

PSDPrasad Music

April - 2025


PSDPrasad Music

1)

பக்தர் மனதில் அமைதியைத்
தந்து இன்பம் சேர்ப்பவன் !
சொக்க வைக்கும் சுந்தரன் !
சேர்ந்த பாவம் தீர்ப்பவன் !

தனக் கிணை இலாதவன்
ஸ்ரீ ராமனையே வணங்கினேன் ! (2)

ராம ! ராம ! ராம ராம் !
ராம ! ராம ! ராம ராம் ! (2)

2)

முடிந்து வைத்த சடையுடன்
மிளிர்ந்து ஒளிரு கின்றவன் !
அடிய வரின் பாவமும்
அச்சங் களும் அழிப்பவன் !

தனக் கிணை இலாதவன்
ஸ்ரீ ராமனையே துதிக்கிறேன் ! (2)
ராம ! ராம ! ராம ராம் !
ராம ! ராம ! ராம ராம் ! (2)

3)

சத்ய ரூபம் காட்டிடும்
சமத் துவன்நன் மங்கலன் !
நித்ய வாழ்வின் இன்னல்கள்
தீர்க்கும் கருணை குணத்தவன் !

தனக் கிணை இலாதவன்
ஸ்ரீ ராமனையே துதிக்கிறேன் ! (2)
ராம ! ராம ! ராம ராம் !
ராம ! ராம ! ராம ராம் ! (2)

PSDPrasad Music

4)

நாமம், ரூபம் பலவென
 நாமும் போற்றிப் பாடினும்
 ரூபம் என்றி லாதவன்..
 மாசிலாத மாண்பினன் !

தனக் கிணை இலாதவன்
 ஸ்ரீ ராமனையே துதிக்கிறேன் ! (2)
ராம ! ராம ! ராம ராம் !
 ராம ! ராம ! ராம ராம் ! (2)

5)

உலக மாயை தாண்டிய
 உண்மைப் பொருளாய் ஆனவன் !
களங்க மிலாத் தூயவன் !
 பேதம் கடந்த நாயகன் !

தனக் கிணை இலாதவன்
 ஸ்ரீ ராமனையே துதிக்கிறேன் ! (2)
ராம ! ராம ! ராம ராம் !
 ராம ! ராம ! ராம ராம் ! (2)

PSDPrasad Music

6)

உலகக் கடலில் ஓடமாய்
 உதவும் கருணைக் கடல் அவன் !
உருவம் பலவாய் தோன்றினும்
 உடலைக் கடந்த நற்குணன் !

தனக் கிணை இலாதவன்
 ஸ்ரீ ராமனையே துதிக்கிறேன் ! (2)
ராம ! ராம ! ராம ராம் !
 ராம ! ராம ! ராம ராம் ! (2)

7)

நிறைந்து எங்கும் உறைந்திடும்
  நிரந்தர மெய்ப் பொருளவன் !
குறை விலாது காவியங்கள்
  உயர்த்தி போற்றும் உத்தமன் !

தனக் கிணை இலாதவன்
  ஸ்ரீ ராமனையே துதிக்கிறேன் ! (2)
ராம ! ராம ! ராம ராம் !
  ராம ! ராம ! ராம ராம் ! (2)

8)

நலமும், சுகமும் அருள்பவன் !
  பற்றும், பிணைப்பும் அறுப்பவன் !
உலகின் மாயை விலக்கிடும்
  உயர்ந்த குருவும் ஆனவன் !

தனக் கிணை இலாதவன்
  ஸ்ரீ ராமனையே துதிக்கிறேன் ! (2)
ராம ! ராம ! ராம ராம் !
  ராம ! ராம ! ராம ராம் ! (4)

9)

வ்யாச முனி தந்த துதியாம்
  ராமாஷ்டகம் இதனை..
படித்தாலும், கேட்டாலும்
  நலம் கூடும், இன்பம் பெருகும் !
கல்வியும், செல்வமும்
  குன்றாத புகழும் கைகூடும்
இறுதியிலே முக்தியும் கிடைக்கும் !

(அஷ்டகம் முற்றிற்று)

PSDPrasad Music